## சோதனைகளையும் வேதனைகளையும் சாதனைகளாக்கிய பெருமகன்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆற்றல்மிகு ஆட்சியாளராகத் திகழ்கிறார் !

## சென்னை கிழக்கு மாவட்டத்தில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னின்று நடத்திய முதல்வர் பிறந்தநாள் விழாவில் நீதியரசர் கே.என்.பாஷா புகழுரை!

சென்னை, மார்ச் 16–

சென்னை கிழக்கு மாவட்டத்தில் அமைச்சர் பி.கே. சேகர்பாபு முன்னின்று நடத்திய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிறந்தநாள் விழாவில் நீதியரசர் கே.என்.பாஷா அவர்கள் உரையாற்றும்போது “சோதனைகளையும் வேதனைகளையும் சாதனைகளாக்கிய பெருமகன் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றல்மிகு ஆட்சியாளராகத் திகழ்கிறார்” என்று புகழாரம் சூட்டினார்.

சென்னை கிழக்கு மாவட்டக் கழகம் சார்பில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னெடுப்பில் நடைபெற்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 ஆம் ஆண்டு பிறந்த நாள் விழாவில் நீதிபதி கே.என்.பாஷா ஆற்றிய உரை வருமாறு:–

“எங்கள் வாழ்வும், எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு“ என்ற பாவேந்தர் பாரதிதாசன் அவர்களுடைய வைர வரிகளோடு எனது மக்கள் முதல்வரின் மனிதநேய திருவிழா உரையினை தொடங்குகின்றேன்.

இந்த இனிய விழாவிற்குத் தலைமை தாங்கும் இளையவர், இனியவர் சதீஷ்குமார் அவர்களே, இந்த விழாவின் மகுடமாக இங்கே வீற்றிருக்கக்கூடிய என்றென்றும் என் மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய, ஏழு முறை தேசிய விருது பெற்று சாதனை படைத்த ஒரே கவிஞர், பன்முகத் திறன் கொண்ட வித்தகர், மிகச்சிறந்த எழுத்தாளர், பேச்சாளர், சாகா வரம் பெற்ற இனிய கருத்தாழமிக்க திரைப்பாடல்கள், கவிதைகள், நாவல்கள், சிறுகதைகள், கட்டுரைகள், காவியங்களின் படைப்பாளி கவிப்பேரரசு வைரமுத்து அவர்களே,

என்றும் என் மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரியவரும், ஆற்றல்மிக்க அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்களே,

என் அருமை சகோதரர், என்றென்றும் என் மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரியவர், எப்பொழுதும் சிரித்த முகத்துடன், தான் எடுக்கின்ற எந்தப் பணியானாலும், வேகத்துடனும், விவேகத்துடனும் பணியாற்றும் என் அருமைச் சகோதரர் நீதியரசர் அக்பர் அலி அவர்களே,

மரியாதைக்கும், அன்பிற்கும், போற்றுதலுக்கும் உரிய சென்னை மாநகரத்தின் மேயர் அவர்களே, மற்றும் இந்த விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற அனைவருக்கும் என் நன்றி கலந்த, இதயம் கனிந்த மாலை வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ள நான் கடமைப்பட்டு இருக்கின்றேன்.

கோடானுகோடி உலக வாழ் தமிழ் மக்களின் இதய சிம்மாசனத்தில் நிரந்தரமாக வீற்றிருக்கக்கூடிய எம் பேரன்பிற்கும், பெருமதிப்பிற்கும் உரிய மறைந்தும் மறையாமலும் இருக்கக்கூடிய முத்தமிழ்ச் செல்வர் எந்நாளும் நெஞ்சக்கோவிலில் குடியிருப்பவர் கலைஞர் அவர்களின் அருந்தவப் புலவர் துடிப்புமிக்க தலைவர் மக்கள் முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுடைய பிறந்த நாள் விழா – மனிதநேய விழாவாக நடக்கும் இந்த இனிய விழாவில், நடுநிலை கொண்ட என்னைப் போன்றவர்கள் கலந்துகொள்கின்ற வாய்ப்பினைப் பெற்றமைக்கு பெருமையும், பெருமகிழ்ச்சியும் அடைகின்றேன்.

**பல்திறன் கொண்ட மக்கள் முதல்வர்!**

பல்திறன் கொண்ட பண்பாளர்தான் நம்முடைய மக்கள் முதல்வர் அவர்கள் என்று சொன்னால், அது மிகையாகாது.

மிகச் சிறந்த செயல்வீரர், ஆற்றல்மிகு ஆட்சியாளராகத் திகழ்பவர், சிறந்த நடிப்புத் திறன் மிக்கவர். ‘முரசே முழங்கு’ என்ற பிரச்சார நாடகத்தில் நடித்து, பெரும் புகழும் பெயரையும் பெற்று, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பொற்கரங்களால் கணையாழி அணிவிக்கப்பட்டு, கேடயம் பெற்றவர்.

லண்டன் மாநகரில், அய்ரீஸ் பன்னாட்டு பல்கலைக் கழகம், தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, அரசியல் மேலாண்மைத் துறையில் கவுரவ டாக்டர் பெற்று, தமிழ் மண்ணுக்குப் பெருமை சேர்த்தவர்.

பேரறிஞர் அண்ணாவிற்குப் பிறகு, வெளிநாட்டில் பட்டம் பெற்ற பெருமை நம் முதல்வரையே சாரும் என்றால், அது மிகையாகாது.

44 ஆவது வயதில், சென்னை மாநகரத்தினுடைய 37 ஆவது மேயராகப் பொறுப்பேற்று சிங்காரச் சென்னையைக் கண்டவர் நம் தளபதி அவர்கள்.

இந்தியத் திருநாட்டில் டாக்டர் ராஜேந்திர பிரசாத், பண்டிட் ஜவகர்லால் நேரு, இரும்பு மனிதர் என்று பெயர் பெற்ற வல்லபாய் பட்டேல் ஆகியோர் மேயர் பதவியில் அமர்ந்து அலங்கரித்தவர் பட்டியலில், நம்முடைய முதல்வர் அவர்களின் பெயரும் இடம்பெறுகிறது என்று சொன்னால், நமக்கெல்லாம் அது பெருமை




என்று சொன்னால், அது மிகையாகாது.

மனிதநேயப் பண்பாளர் என்று அவரைச் சொன்னால், எல்லோரும் ஏற்றுக்கொள்வார்கள். அத்தகைய மனிதநேயம் கொண்ட ஒரு உத்தம மனிதர்தான் நம்முடைய மக்கள் முதல்வர் அவர்கள்.

இந்த இனிய விழா, மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவாகக் கொண்டாடப்படுவது மிகவும் சிறப்புக்குரியது.

முதல்வர் அவர்கள், தனது ஒவ்வொரு பிறந்த நாளின்போதும், மக்கள் நலத் திட்டங்களை அறிவிப்பது வழக்கமாகும். அதுபோன்று, தனது 72 ஆம் ஆவது பிறந்த நாள் செய்தியாக, மனிதநேய மிக்க நம்முடைய முதல்வர் அவர்கள், மாற்றுத் திறனாளிகளை அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் கவுன்சிலர்களாக நியமனம் செய்யும் சட்டத் திட்டத்தைக் கொண்டு வருகிறார்.

ஒவ்வொரு பிறந்த நாளிலும், ஒவ்வொரு திட்டம். அத்தனையும் முத்து முத்தான திட்டங்கள். 2023 ஆம் ஆண்டில், விளிம்பு நிலை மக்கள் நலனுக்கான, மனிதக் கழிவை, மனிதனே அகற்றக்கூடிய அவலநிலையை மாற்ற, அதற்கான நவீன கருவிகளைக் கொண்டு, தொழில் முனைவோர்களாக ஆக்கும் திட்டத்தை அறிவித்தார். அந்தத் திட்டத்தின்மூலமாக 202 பேர் தொழில் முனைவோர்களாகி இருக்கிறார்கள்.

2024 ஆம் ஆண்டில், சென்னை மக்களின் குடிநீர்த் தேவையைத் தீர்த்து வைக்க, நெம்மேலியில் கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையத்தைத் திறந்து வைத்தார்.

இவை அனைத்தும் அவருடைய மனிதநேயக் காட்டுகின்ற பண்புகளே ஆகும் என்று சொன்னால், அனைவரும் ஏற்றுக் கொள்வார்கள்.

சோதனைகளையும், வேதனைகளையும் சாதனைகளாக ஆக்கிய பெருமகன் நம்முடைய மக்கள் முதல்வர் அவர்கள்.

**தளபதி என்று எல்லோராலும் அன்போடு அழைக்கப்படும் மக்கள் முதல்வர், கடந்து வந்த வாழ்க்கைப் பாதையைத் திரும்பிப் பார்த்ததால், பிரமிப்பு அடைகிறேன். மக்கள் முதல்வர் அவர்கள், நெருப்பாற்றிலே நீந்தி வந்தவர்; காட்டாற்று வெள்ளத்தைக் கடந்து வந்தவர். அவர் கொள்கை வேந்தர்.**

**23 வயதில் சிறைவாசம் கண்டவர்!**

**முத்தமிழறிஞர் கலைஞரின் கருத்தாழமிக்க கருத்துகளைக் கொண்ட ‘பராசக்தி’ வசனங்கள் ஏற்படுத்திய தாக்கம் இன்றுவரை தொடர்கிறது.**

**அவரின், “பாட்டொலிக்கும் குயில்கள் இல்லை என் பாதையில், படமெடுத்தாடும் பாம்புகள் நெளிந்திருக்கின்றன. தென்றலைத் தீண்டியதில்லை நான். ஆனால் தீயைத் தாண்டியிருக்கிறேன்” என்ற வைர வரிகள்தான் நம் மக்கள் முதல்வரின் வாழ்க்கைப் பாதையில் படர்ந்திருக்கின்றன.**

23 வயதில், சிறைவாசம் கண்டவர் நம் மக்கள் முதல்வர் அவர்கள். 23 வயதில், திருமணமாகி சில மாதங்களில், ஒரு புது மணமகனாக இருக்கிறார்; அப்படி புதுமணமகனாக இருக்கும் அவரை, அவரது தந்தை, தனயனை வழியனுப்பி வைத்தார் இரவு நேரத்தில், சிறைக் கொட்டடிக்கு.

**நீதியரசர் இஸ்மாயில் அளித்த ஆவணம்!**

அங்கே அவருக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளைப்பற்றி பேரன்புக்கும், பெருமதிப்பிற்கும் உரிய நீதியரசர் இஸ்மாயில் ஆணைய அறிக்கையில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. மேனாள் மேயர் சிட்டிபாபு அவர்கள் எழுதிய குறிப்புகள் அடங்கிய நோட்டுப் புத்தகத்தை முக்கிய ஆவணமாக, சாட்சியமாக நீதியரசர் இஸ்மாயில் அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கின்றார்.

அந்த நோட்டுப் புத்தகத்தை நம்பகத்தகுந்த, நம்பிக்கைக்குரிய சாட்சியமாக நீதிபதி இஸ்மாயில் எடுத்துக்கொண்டார். அதனை மேனாள் மேயர் சிட்டிபாபு அவர்கள், சிறைச்சாலையில் என்ன கொடுமைகள் நடந்தன என்பதை தெள்ளத் தெளிவாக விளக்கியிருக்கிறார் அந்த நோட்டுப் புத்தகத்தில்.

நீதியரசர் இஸ்லாமாயில் ஆணைய அறிக்கையை, நான் இன்று காலையில்தான் படித்துப் பார்த்தேன். அப்போது நான் நெஞ்சம் நெகிழ்ந்து போனேன் என்று சொன்னால், அது மிகையாகாது.

**நீதியரசர் இஸ்மாயில் ஆணைய அறிக்கை!**

இரவு ஒரு மணி, சிறு சலசலப்பு, சத்தம் கேட்கிறது. மேயர் சிட்டிபாபு உள்பட அனைவரும் விழித்திருக்கிறார்கள். அந்தச் சிறைச்சாலையில் கொட்டகை தரை, கல்லும், குப்பையும் நிறைந்ததாக இருந்தது. அதில்தான் அவர்கள் படுக்க வேண்டும் என்ற நிலைமையை நீதியரசர் இஸ்மாயில் ஆணைய அறிக்கையில் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்.

நம்முடைய மக்கள் முதல்வர் அவர்கள், சிறைச்சாலைக் கொட்டகைக்குள் கொண்டு செல்வதற்கு முன்பே காவல்துறையினரால் அடிக்கப்பட்டு, இரவு நேரத்தில், உள்ளே தள்ளப்பட்டார். ஏன் அடித்தார்கள்? எதற்கு அடித்தார்கள்? என்றே தெரியவில்லை.

அதைப்பற்றி மேனாள் மேயர் சிட்டிபாபு குறிப்பிடுகிறார், அவ்வளவு அடிபட்டு வந்த நம்முடைய மக்கள் முதல்வர் அவர்களை சிறைக் கொட்டகைக்குள் தள்ளும்போது, கீழே விழுந்து எழுந்தார். ஏற்கெனவே உள்ளே இருந்தவர்களும் அடிபட்டுக் கிடக்கிறார்கள். இவரைப் பார்த்ததும் உள்ளே இருந்தவர்கள் துடிக்கிறார்கள்.

ஆனால், நம்முடைய மக்கள் முதல்வர் அவர்கள், இவருடைய துண்டை எடுத்துத் தரையில் விரித்து, நீங்கள் படுங்கள்; ஓய்வு எடுங்கள் என்று சொல்கிறார்.

அதுதான் மனிதநேயம். தனக்கு ஏற்பட்ட வலியை, தனக்கு ஏற்பட்ட தொல்லையை, தனக்கு ஏற்பட்ட துன்பத்தை, துயரத்தை எல்லாம் மறந்து, அவருடைய சகோதரர்களைப் பார்த்து கவலையடைகிறார். அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்கிறார்.

மீண்டும் நம் மக்கள் முதல்வர் அவர்களை, காவல்துறையினர் அடிக்க லத்தியை உயர்த்தி வருகிறார்கள். குறுக்கே பாய்கிறார் மேனாள் மேயர் சிட்டிபாபு அவர்கள். அடி அவர்மீது விழுகிறது. அந்த அடியிலிருந்து அவர் நிவாரணம் பெற முடியவில்லை. சிகிச்சையும் பலனிக்கவில்லை. இறுதியில் அவர் மூச்சடங்கி, மறைந்தார். மறைந்து தியாகி ஆனார் என்று சொன்னால், அது மிகையாகாது.

சிறைச்சாலையில் நம் மக்கள் முதல்வர் அவர்களை காவல்துறையினர் மீண்டும் மீண்டும் தாக்குகிறார்கள். 1976 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் மிகவும் சோதனையும், வேதனையும் மிகுந்த காலகட்டமாகும். இப்படியெல்லாம் தியாகம் செய்துதான் அவர் வந்தார்.

**14 வயதில் அரசியல் பணி!**

14 வயதிலே நம்முடைய மக்கள் முதல்வர் அவர்கள், கோபாலபுரத்தில் தி.மு.க. இளைஞரணியை உருவாக்கினார். 14 வயதிலேயே அவருடைய அரசியல் பணி தொடங்கியது. முரசொலி மாறன் அவர்களுக்காகத் தேர்தல் பிரச்சாரம் செய்தார்; பல்வேறு பொதுக்கூட்டங்களில் கலந்துகொண்டார்.

அவருடைய பணிகள், வார்த்தைகளில் எண்ணி முடிக்க முடியாத பணிகளாகும். அத்தகைய பணிகளை அவர் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறார். எவ்வளவு பணிகள்? எவ்வளவுத் திட்டங்கள்? எவ்வளவு தியாகங்கள்?

**அவருடைய வாழ்க்கையில் போராட்டம்! போராட்டம்! போராட்டம்தான்!**

**அவர் எடுத்தவுடனேயேமுதலமைச்சராகி விடவில்லை. இளைஞரணி தலைவராக இருந்தார்; உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தார்; சென்னை நகர மேயராக இருந்தார்; துணை முதலமைச்சரானார்; அதற்குப் பின்னால், அவர் சார்ந்திருக்கக்கூடிய இயக்கத்திற்கு செயல் தலைவரானார். அதற்குப் பிறகுதான், தம் தந்தை மறைந்ததற்குப் பிறகுதான், இயக்கத் தலைவரானார். அதற்குப் பிறகுதான், தமிழ்நாட்டின் எதிர்க்கட்சித் தலைவரானார். அதற்குப் பிறகுதான் தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றார்.**

**அவர், கடந்து வந்த பாதை சாதாரணமான பாதையல்ல. பல சோதனைகளையும், வேதனைகளையும் தாங்கித்தான், அவர் புகழ் ஏணியின் உச்சியை எட்டியிருக்கின்றார் என்று சொன்னால், அது மிகையாகாது.**

பல்வேறு திட்டங்கள் அவருடைய ஆட்சிக் காலத்தில். என் அன்பு நண்பர் சிவமுருகன் அவர்கள், ஒன்றிய உள்துறை அமைச்சகத்தில் சிறப்புப் புலனாய்வு அதிகாரியாகப் பணி புரிந்து, பணி நிறைவு பெற்றவர். நாள்தோறும் என்னுடன் காலையில் நடைபயிற்சியில் வருபவர். கவிப்பேரரசு வைரமுத்துவின் தீவிர ரசிகர்.

அவரிடம் நான், தங்களைக் கவர்ந்த முதல்வரின் திட்டங்களைச் சொல்லுங்கள் என்று சொன்னேன். ஒரு 14, 15 திட்டங்களைப் பட்டியலிட்டுச் சொன்னார். ஏற்கெனவே மூன்று திட்டங்களை நான் குறிப்பிட்டு விட்டேன். சில திட்டங்களை மட்டும் உங்களிடம் கூறி, விடைபெற விரும்புகின்றேன்.

என் வகுப்புத் தோழர், என்றென்றைக்கும் என் அன்பிற்கும், மரியாதைக்கும் உரியவர் நீதியரசர் தோழர் சந்துரு அவர்களே! அவரை வருக, வருக என உங்களோடு சேர்ந்து நானும் வரவேற்கிறேன்.

மிசா கொடுமைகளைப்பற்றி அவர் நன்கு தெரிந்தவர். இஸ்மாயில் ஆணையத்தில் அவர் வாதாடி, போராடி வெற்றி கண்டவர். சிறைச்சாலைக்குச் சென்று, தளபதி மக்கள் முதல்வர் அவர்களைச் சந்தித்தவர்களில் அவரும் ஒருவர். அப்படிப்பட்ட சிறப்புப் பெற்ற நீதியரசர் அவர்கள் இங்கே வந்திருக்கின்றார். மிகவும் மகிழ்ச்சியடைகிறோம்.

**முதல்வரின் சிறப்பான திட்டங்கள்!**

நம் மக்கள் முதல்வர் பொறுப்பேற்றவுடன் முதன் முதலாக 5 திட்டங்களில் கையொப்பமிட்ட திட்டங்களில் ஒன்று விடியல் பயணத் திட்டம். பெண்கள், மாற்றுத் திறனாளிகள், திருநங்கையர் ஆகியோருக்கான கட்டணமில்லா விடியல் பயணத் திட்டத்தில், இதுவரை கிட்டத்தட்ட 6,661.47 கோடி ரூபாய் செலவில், மகளிரும், மாற்றுத் திறனாளிகளும், திருநங்கைகளும் ஏறத்தாழ 473.61 முறை பயண நடைகளும், திருநங்கைகள் 28.62 இலட்சம் பயண நடைகளும், மாற்றுத் திறனாளிகள் 3.78 கோடி பயண நடைகளும் மேற்கொண்டு, மாதம் ஒன்றுக்கு 888 ரூபாய் வரை சேமிக்கும் வாய்ப்பைப் பெற்றிருக்கின்றனர்.

இரண்டாவதாக என்னைக் கவர்ந்த திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம். ஏழை மக்களின் குடும்பங்களிலும் கிராமப் பொருளாதாரத்தைச் சுமக்கும் முதுகெலும்பாகப் பெண்கள் திகழ்கின்றார்கள். கணக்கில் கொள்ளப்படாத பெண்களின் உழைப்பை முறையாக அங்கீகரிக்கத்தான் மகளிர் உரிமை தொகைத் திட்டம் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. எனவேதான், இந்தத் திட்டத்திற்கு மகளிருக்கான உதவித் தொகை என்று இல்லாமல், மகளிர் உரிமைத் தொகை என்றுகவனத்துடன் பெயரிடப்பட்டு இருக்கின்றது.

இத்திட்டம், 15.9.2023 அன்று காஞ்சிபுரத்தில் நடைபெற்ற பிரம்மாண்டமான விழாவில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட இத்திட்டத்தில், இதுவரை 1 கோடியே 15 இலட்சம் மகளிருக்கு மாதந்தோறும் ரூ.1000 உரிமைத் தொகையாக வழங்கப்படுகிறது. இதனால் மகளிர் சமுதாயம் தன்னம்பிக்கையுடன் தன்னுடைய அன்றாடப் பணிகளில் ஈடுபட்டு முதலமைச்சர் அவர்களைப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

**புதுமைப் பெண் திட்டம்**

அடுத்த திட்டம், என் உள்ளத்தை மிகவும் கவர்ந்த திட்டமாகும். புதுமைப் பெண் திட்டம்.

முதலமைச்சர் அவர்களால் பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான காஞ்சி மாநகரில் தொடங்கிவைத்த ஒரு புரட்சிகரமான திட்டம் இது. 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளில் பயின்ற மாணவியர், தடையின்றி உயர் கல்வி பயில வேண்டும் என்ற நோக்கத்தோடு, தமிழ்நாட்டில் உள்ள மாநில அரசு / ஒன்றிய அரசு சார்ந்த, பல்கலைக்கழக மானியக் குழுவின் அங்கீகாரம் பெற்ற உயர் கல்வி நிறுவனங்களில், இளநிலைப் பிரிவில் மருத்துவம், துணை மருத்துவம், பொறியியல், கலை மற்றும் அறிவியல் பாடங்கள் பயிலவும், பட்டயப் படிப்புகள் மற்றும் தொழில் துறைப் பயிற்சி நிறுவனங்களில் பயிலவும், உதவித் தொகையாக, மாதந்தோறும் ரூ.1,000/ ஒவ்வொரு மாணவிக்கும் வழங்கப்பட்டு வருகின்றது. நேரடி பயன் பரிமாற்ற முறைப்படி, இந்த உதவித்தொகை, 2.73 இலட்சம் மாணவியரின் வங்கிக் கணக்கில் செலுத்தப்படுகின்றது.

**அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம்!**

இதேபோல மாதம் 1,000 ரூபாய் வழங்கும் ஊக்கத்தொகை வழங்கும் மற்றொரு திட்டமும் கொண்டுவரப்பட்டது. அதுதான் அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம்; தமிழ்நாட்டில் ஒடுக்கப்பட்ட சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காக முதலமைச்சர் அவர்களின் ஆழ்ந்த சிந்தனையுடன் 28.6.2023 அன்று அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் என்ற புதிய திட்டத்தை அறிவித்து செயல்படுத்தி வருகின்றார்.

இன்னும் ஓர் அற்புதமான திட்டம் இன்னுயிர் காப்போம்; நம்மைக் காக்கும் 48 திட்டம்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 18.11.2021 அன்று செங்கல்பட்டு மாவட்டத்தில் நடைபெற்ற ஒரு விழாவில் தொடங்கிவைத்த “இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48” திட்டம் சாலை விபத்தினால் ஏற்படும் உயிர் இழப்புகளைக் குறைத்திடும் வகையிலும், அதனால் குடும்பங்களுக்கு ஏற்படும் மருத்துவச் செலவுகளை குறைப்பதற்கும் உதவுகிறது. இத்திட்டத்தின் மூலம் சாலை விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, “முதல் 48 மணி நேரத்திற்கான அவசர மருத்துவ சிகிச்சை செலவை” தமிழ்நாடு அரசே ஏற்கும். சாலை விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு, விபத்து நடந்த முதல் 48 மணிநேர நெருக்கடியான கால கட்டத்தில், துல்லியமான திட்டமிடல் மூலம், காலவிரயத்தைத் தவிர்த்து உயிரைக் காக்கும் உடனடி சிகிச்சையை இலவசமாகப் பெறுவதை இத்திட்டம் உறுதி செய்கிறது.

**நான் முதல்வன் திட்டம்!**

நமது முதலமைச்சர் அவர்களின் கனவுத் திட்டமான நான் முதல்வன் திட்டம் 1.3.2022 அன்று முதலமைச்சர் அவர்கள் பிறந்த நாளில் தொடங்கப்பட்ட திட்டம். நான் முதல்வன் திட்டத்தின் மூலம் உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளி மாணவர்களுக்கு உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு பெறுவதற்கான பயிற்சிகள் வழங்கப் பெறுகின்றன திறன் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

**பணிபுரியும் மகளிருக்கு “தோழி விடுதிகள்”**

சமூகநலத்துறையின் கீழ் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின் கீழ் 19 மாவட்டங்களில் பணிபுரியும் மகளிருக்கான தோழி விடுதிகள் செயல்பட்டு வருகின்றன.

**திருமண நிதியுதவித் திட்டத்தில் சாதனை!**

மகளிர் திருமண நிதியுதவி திட்டங்களின்கீழ், 3 ஆண்டுகளில் சுமார் 1 இலட்சத்து 26 ஆயிரத்து 637 மகளிர்க்கு 1.047 கோடி ரூபாய் திருமண நிதியுதவியாக வழங்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்கக் கொள்கை!**

தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்கக் கொள்கை 2009-2023 இல் முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டது. 2021 ஆம் ஆண்டு வரை தமிழ்நாட்டில் பதிவு செய்யப்பட்ட ஸ்டார்ட் அப் நிறுவனங்களின் எண்ணிக்கை 2032. இன்றைய நிலவரப்படி இது 4 மடங்கிற்கும் மேல் அதிகரித்து 8,416ஆக உயர்ந்துள்ளது.

பல்வேறு திட்டங்களை நான் அடுக்கிக் கொண்டே போகலாம். நேரம் கருதி நான் அதிக நேரத்தை எடுத்துக் கொள்ள விரும்பவில்லை.

வாழ்க தமிழகம்!

வெல்க தமிழகம்!

வாழ்க நம் மக்கள் முதல்வரின் புகழ்!

இவ்வாறு நீதியரசர் கே.என்.பாஷா உரையாற்றினார்.